## மகநெகும இமல்சன் புறடக்சன் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2023 / 2024

---

மகநெகும இமல்சன் புறடக்சன் கம்பனி (பிறைவேட்) லிமிட்டட்டின் 2023 சனவரி 01 முதல் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள அதிகாரச்சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் 2025 மார்ச் 28 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமா்ப்பிக்கப்பட வேண்டும் என கருதுகின்ற கம்பனியின் செயற்பாடுகள் தொடர்பான அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் சமா்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரினதும் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனத்தால் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமா்ப்பிக்கப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காணித்துக் கொள்ளல் வேண்டும்.

## 2 கணக்காய்வு அவதானிப்புகள்

### 2.1 நிறுவுதல்

(அ) 2024 ஜனவரி 21 ஆம் திகதி இடம்பெற்ற அமப/04/0053/104/004 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகாரச் சபைக்கு சொந்தமான கம்பனியொன்றாக செயற்பட்ட வீதி நிர்மாண மற்றும் அபிவிருத்தி தனியார் கம்பனியை முழுமையாக மூடுவதற்கும், தனியார் பொது கம்பனியொன்றை நிறுவுவதற்கான ஆற்றல் தொடர்பில் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் திறைசேரியினால் பரிசோதனை மேற்கொள்வதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மேலும் 2002 டிசம்பர் 09 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவையின் பொருளாதாரக் கொள்கைகள் குழுவின் வழிகாட்டல்களுக்கமைய அந்த கம்பனிக்குச் சொந்தமான அனைத்து நிர்மாண உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் சுவிகரிக்கப்பட்டு அந்த உபகரணங்கள் இயந்திரங்கள் ஆகியவற்றை தனியார் துறைக்கு வழங்கும் பொருட்டு அரச மற்றும் தனியார் ஒருங்கிணைந்த கம்பனி ஒன்றினை நிறுவுதல் தொடர்பில் இயலுமை பரிசோதனை செய்வதற்காக பெருந்திருக்கள் அமைச்சு மற்றும் பொது திறைசேரிக்கு அறிவுரை வழங்குவதற்கும் மேற்படி கூறிய அமைச்சரவை கூட்டத்தில் மேலும் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும், அரச மற்றும் தனியார் ஒருங்கிணைந்த கம்பெனி ஒன்றினை நிறுவுதல் தொடர்பில் பெருந்தெருக்கள் அமைச்சர் மற்றும் பொது திறைசேரியினால் சாத்தியவள பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டமைக்குரியதாக கணக்காய்வுக்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் அதற்கமைய நிர்மாண கைத்தொழில் சங்கம் மற்றும் ஒப்பந்ததாரர்களின் தேசிய சங்கம் ஆகியவற்றுடன் பங்குடமை ஒன்றினை ஏற்படுத்தி கம்பனியை நிறுவுவதற்கு 2004 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய அமப/04/0848/004/013-I அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் அந்த அமைச்சரவை தீர்மானத்திற்கு முன்னர் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 795/2004 ஆம் இலக்கமுடைய பனிப்பாளர் சபை தீர்மானத்தின் அடிப்படையில் 2004 ஜூன் 09 ஆம் திகதி வரையறுக்கப்பட்ட மகநெகும இமல்ஷன் உற்பத்தி (தனியார்) கம்பனி நிறுவப்பட்டிருந்தது.

(ஆ) 2004 ஆகஸ்ட் 03 ஆம் திகதிய 30/2004 ஆம் இலக்கமுடைய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் தேசிய நிர்மாண ஒப்பந்ததாரர்களின் சங்கம் மற்றும் நிர்மாண கைத்தொழில் சபையுடன் இணைந்து பங்குடமை முயற்சி ஒன்றினை மேற்கொள்வதற்கு கம்பனிக்கு 2004 ஆகஸ்ட் 27 ஆம் திகதிய அமப/04/0848/004/004/013-I ஆம் இலக்கமுடைய அமைச்சரவை

அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறான பங்குடமை முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) கம்பனியின் மூலதன பங்களிப்பிற்காக ரூபா 100 பெறுமதியான 02 பங்குகள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மற்றும் கம்பனியின் தலைவருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த பங்குகளுக்கு கம்பனிக்கு பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேல் அதிகமாக மூலதன பங்களிப்பாக 2004 ஆம் ஆண்டில் வீதி அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து வழங்கப்பட்ட ரூபா 1,000,000 இற்காக இதுவரையிலும் கம்பெனியினால் பங்கு வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கம்பனியின் பெரும்பாலான உரித்து திரைசேரிக்கு சாட்டுமாறு மற்றும் எஞ்சிய பகுதியை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கிடைக்குமாறும், கம்பனியின் அமைப்பு அகவிதியை திருத்தியமைப்பதற்கு 2013 பெப்ரவரி 18 ஆம் ஆந் திகதிய அமப/13/0134/505/004 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கம்பனியின் அமைப்பு அகவிதி இதுவரையிலும் திருத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.2 கட்டுப்பாடு மற்றும் செயற்படுத்தல்

தற்போதைய தலைவர் கம்பனியின் ஆரம்பம் முதல் இதுவரையிலும் தலைவர் பதவியில் செயல்படுவதுடன் 2023 ஆம் ஆண்டு முதல் கம்பனியின் பணிப்பாளர் சபையில் மூலம் வீதி அபிவிருத்தி அதிகார சபையில் நிரந்தர பதவி வகிக்கும் இரு உத்தியோகத்தர்கள் மற்றும் தனியார் துறையின் நான்கு பிரதிநிதிகள் உள்ளடங்களாக நால்வர் நியமிக்கப்பட்டிருந்தனர். கம்பனியின் தலைவரால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவருக்கு முகவரி இடப்பட்ட 2023 செப்டம்பர் 11 ஆம் திகதிய MNE/CH/066/2023 ஆம் இலக்கமுடைய கடிதத்தின் மூலம் கம்பனியின் சொத்துக்களின் சரி பாதிக்கு உரித்து கோரப்பட்டிருந்தது.

## 2.3 நிதிக்கூற்றுக்கள்

### 2.3.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

கம்பனியின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் உரிய திகதியிலிருந்து 01 வருடமும் 07 மாதங்களுக்கும் மேற்பட்ட காலம் தாமதித்து 2024 ஒக்தோபர் 21 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2023 மற்றும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இதுவரை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினம்

2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவினம் பின்வருமாறு.

| விபரம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி<br>ரூபா |
|---|---|
| சொத்துக்கள் | 112,230,850 |
| உரிமையாண்மை | 38,813,339 |
| பொறுப்புக்கள் | 73,417,511 |
| வருமானம் | 105,422,185 |
| செலவினம் | 142,243,889 |
| நட்டம் | 36,821,707 |

### 2.4 கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலை மற்றும் தொழிற்பாட்டு நடவடிக்கைகள்

(அ) தன்னார்வ ஓய்வூதிய முறைமை அறிமுகப்படுத்துவதன் மூலம் பதவியணியை குறைத்த பின்னர் மகநெகும நிர்மாண இயந்திர உபகரணங்கள் தனியார் கம்பனி, மகநெகும இமல்ஷன் உற்பத்தி தனியார் கம்பனி மற்றும் மகநெகும மதியுரை சேவைகள் மற்றும் முகாமைத்துவ தனியார் கம்பனி ஆகியவற்றை ஒருங்கிணைத்து தனியானதொரு கம்பனியை நிறுவுவதற்கு 2023 மார்ச் 28 ஆம் திகதிய அமப/23/0394/608/033 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் பதவியணியை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், இந்த கம்பனியை கலைத்து தனியார் கம்பனியொன்றினை நிறுவுவதற்கு உரிய நடவடிக்கைகள் இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை அவ்வாறே இந்த கம்பனிகளுக்கு கலைப்பாளர் ஒருவராக தனியார் கம்பனி ஒன்றினை நியமிப்பதற்கு கம்பனியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த கலைப்பாளரை தெரிவு செய்த முறை தொடர்பில் சான்றுபடுத்தும் ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளரின் 2024 மே 23 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் கலைக்கும் போது கம்பனியின் சொத்துக்களை கம்பனியின் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மற்றும் கம்பனியின் தலைவருக்கு சமமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த காரணத்தால் சிக்கலான நிலைமையொன்று உருவாகி

கலைப்பாளர் ஒருவரை நியமித்தல் இடை நிறுத்துவதற்கு 2023 செப்டம்பர் 07 ஆம் திகதி வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரால் 2024 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய RDA/ADG/NP&AM/MN ஆம் இலக்க கடிதத்தின் மூலம் கணக்காய்வுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. முழுமையாக அரச நிதியினை முதலீடு செய்து நடாத்திச் செல்லப்படும் இந்த கம்பனி தொடர்பில் அமைச்சரவையினால் எடுக்கப்பட்டிருந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்தாமை தொடர்பில் அதன் தாய் கம்பனியாக வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கம்பனியின் பணிப்பாளர் சபை ஆகியவை உரிய கடமையை நிறைவேற்றி இருக்காமையால் கம்பனியினை கலைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.5 கணக்காய்வுக்கான சான்றுகள் இல்லாதிருந்தமை

(அ) 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வில் வழங்கப்படாத பின்வரும் விடயங்களுக்கு உரியதாக உறுதிப்படுத்தும் சான்றுகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| | விடயம் | பெறுமதி ரூபா 2021 ரூபா | பெறுமதி ரூபா 2022 ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று |
|---|---|---|---|---|
| (i) | பணிக்கொடை ஒதுக்கீடு | - | 10,866,300 | பணிக்கொடை ஒதுக்கீட்டு பெறுமதிக்குரிய கணிப்பீடுகள். |
| (ii) | பெற வேண்டிய பெறுமதிசேர் வரி | 731,154 | 731,154 | பெற வேண்டிய பெறுமதி சேர் வரிக்குரிய கணிப்பீடுகள் |
| (iii) | கம்பனிக்கு உரிய வழக்கு | - | 43,948,644 | CHC/299/2016/MR |
| | | | 23,400,000 | CHC/298/2016/MR |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 164,400,000 | CHC/594/15/MR வழங்குகளின் தற்போதைய நிலைமை |
| (iv) | கம்பனியால் தனியார் கம்பனியொன்றுக்கு 2013 ஆம் ஆண்டு முதல் செலுத்த வேண்டிய மீதி | 24,500,000 | 24,500,000 | மீதி உறுதிப்படுத்தும் ஆவணங்கள் |
| (v) | 2015 ஆம் ஆண்டின் உத்தேச பங்கிலாபம் | - | 29,765,787 | பங்கிலாபம் அறிவித்த பணிப்பாளர் சபையின் தீர்மானம் அல்லது வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கைகள் |
| (vi) | கம்பனி அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய 2 ஏக்கர் 9.83 பேர்ச் பரப்பளவான காணியின் மதிப்பீட்டு பெறுமதி | 9,620,000 | 9,620,000 | காணி மற்றும் கட்டிடங்களுக்கான குத்தகை உடன்படிக்கை |
| (vii) | மோட்டார் வாகன மீள்மதிப்பீடு | - | 13,025,000 | மோட்டார் வாகன மீள்மதிப்பீட்டு அறிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| (vii) | கட்டிட பழுதுபார்த்தல் | - | 3,483,255 | இந்த சொத்துக்களின் ஒவ்வொரு விடயம் தொடர்பில் தரவுகள் உள்ளடக்கப்பட்ட முறையான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று மற்றும் 2022.12.31 ஆந் திகதியில் உள்ளபடியான நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு அறிக்கை |
| | அலுவலக உபகரணங்கள் | | 4,906,138 | |
| | தளபாடங்கள் | | | |
| | இயந்திர உபகரணங்கள் | | 4,100,849 | |
| | | | 11,725,250 | |

(ஆ) தன்னார்வ ஓய்வூதியம் வழங்கப்பட்ட பின்னர் கலைக்கும் நடைமுறை ஆரம்பிக்கப்படும் வரையிலும் அத்தியாவசிய கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2023 ஆகஸ்ட் 7 ஆந் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் நாளாந்த சம்பள முறைமையின் கீழ் 07 உத்தியோகத்தர்கள் மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன், தற்போது கம்பனியின் நிர்வாக நடவடிக்கைகளுக்காக அலுவலகமொன்று மற்றும் எந்தவொரு ஊழியரும் சமூகமளிக்காத நிலைமையின் அடிப்படையில் கணக்காய்வினை மேற்கொள்ள தேவையான புத்தகங்கள், ஆவணங்கள் மற்றும் தகவல்களை பெற்றுக்கொள்ளவும் தெளிவுபடுத்தலை பெற்றுக்கொள்ளம் கணக்காய்விற்க முடியாதிருந்தது.

## 2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை

| சட்டங்கள் / ஏற்பாடுகளுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 133 ஆம் பிரிவு | கம்பனியின் பணிப்பாளர் சபையினால் ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டுக்கும் ஒரு தடைவ பங்குடமையாளர்களின் வருடாந்த பொதுக்கூட்டமொன்ற கூட்டப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் 2016 ஆம் ஆண்டின் பின்னர் வருடாந்த பொதுக்கூட்டம் கூட்டப்பட்டிருக்கவில்லை. |

## 2.7 செயற்பாட்டு மீளாய்வு

மணித்தியாலமொன்றுக்கு 10,000 லீட்டர்கள் உற்பத்தி இயலளவுடைய இந்த கம்பனியின் இமல்ஷன் இயந்திரக்கூடம் ஆகக் குறைந்தது நாளொன்றுக்கு 5 மணித்தியாலங்கள் படியாக 20 நாட்கள் உற்பத்தி செயன்முறையில் ஈடுபடுத்துவதன் மூலம் வருடாந்தம் 12 மில்லியன் உற்பத்தி இயலளவினை பேண முடியும் என எதிர்வுகூறப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் 10 சதவீத இயளலவு அல்லது 2020, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கம்பனியை மூடிய காரணத்தால் 2023 ஒக்தோபர் 20 ஆந் திகதி முதல் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊடாக இந்த இயந்திரக்கூடம் மீள பொறுப்பேற்கப்பட்டிருந்த போதிலும், இதுவரையிலும் இயந்திரக்கூடத்தின் உற்பத்தி நடவடிக்கைகள் இடம்பெறாமையால் தற்போது இயந்திரக்கூடம் முழுமையாக குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டது.